
விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 208 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 30 சனிக்கிழமை (15.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## குருந்தூரில் காடைத்தனம்
# தமிழ் மக்கள் மீது தாக்குதல்





- பொங்கலுக்காக மூட்டிய தீயை சப்பாத்துக் காலால் அணைத்த பொலிஸ் அதிகாரி.
- பொங்கலை நடத்தவிடாது விரட்டிய பௌத்த பிக்குகளும் சிங்களவர்களும்
- பொங்கல் வழிபாட்டுக்குச் சென்றவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர்.

தமிழ் மக்களின் ஆதி வழிபாட்டிடமான முல்லைத்தீவு குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் ஆலயத்தில் நேற்று பொங்கல் வழிபாடு நடத்த சென்றிருந்த பொதுமக்களை பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தியதுடன் விழாவிற்கு வந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்தி கற்பூரத்தை சப்பாத்து காலால் மிதித்து அராஜகம் புரிந்துள்ளனர்.

தமிழர்களின் ஆதி வழிபாட்டிடமான குருந்தூர்மலை ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு விகாரை ஒன்றும் நீதிமன்ற உத்தரவை மீறி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 11

## வவுனியாவில் கஞ்சாவுடன் சிப்பாய் கைது

(வவுனியா)

வவுனியா, புதிய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 10 கிலோ 74 கிராம் கேரள கஞ்சாவுடன் கடற்படை சிப்பாய் ஒருவரை வவுனியா மாவட்ட குற் 11

# நீதிமன்ற உத்தரவை மீறி குருந்தூரில் பொங்கலுக்கு தடை
## பொலிஸில் முறைப்பாடு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலய வழிபாட்டினை தடைசெய்தமை தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட் 11

## மருந்து வழங்கலை உறுதி செய்க
### சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

மக்களுக்கு மருந்துகள், தாமதமின்றி வழங்கப்படுவதை சுகாதார அமைச்சு உறுதிசெய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

## யாழ்.பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா
### எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 19,20 மற்றும் 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பு ஒன்று நேற்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை 12

# இன, மதம் மறந்து ஒன்றிணைந்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்
## யாழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார



(யாழ்ப்பாணம்)

இன மத கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே நாம் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். 11

# இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்த இந்தியா தொடர்ந்து ஒத்துழைக்கும்
## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

(கொழும்பு)

இலங்கையை பொருளாதார ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கத்தின் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய வர்த்தகர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இந்தியாவைச் சேர்ந்தவர்கள் நீண்டகாலமாக இலங்கையில் வியாபாரம் 11

# போதை வியாபாரிகள் நால்வர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் விற்பனையுடன் தொடர்புடைய நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஐஸ் 200 மில்லிக் கிராம், கஞ்சா ஆயிரத்து 400 மில்லிக் கிராம் மற்றும் 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த இருவர், புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த இருவர் என நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி - 2023 / 2024
### அணி - II

வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ-4) இனை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **கற்கைநெறிக்கான காலம்** | - ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்) |
| கற்கைநெறி மூலம் | - நிகழ்வழி மூலமாக இடம்பெறும். (Zoom Classes) |
| கற்கைநெறி மொழி | - தமிழ் |
| கற்கைநெறிக்கான கட்டணம் | - ரூபா. 70,000.00 |
| விண்ணப்பப்படிவம் | - ரூபா 1,000.00 |
| பதிவுக் கட்டணம் | - ரூபா 2,000.00 |
| கல்விக் கட்டணம் | - ரூபா 60,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - ரூபா 6,000.00 |
| நூலகக்கட்டணம் (திரும்பப்பெறத்தக்கது) | - ரூபா 1,000.00 |

இக் கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தின் https://forms.gle/hwpehtr6ucD85b8AA இணைப்பின்வழி பூர்த்தி செய்து உயர்தர கல்வித்தகைமை (A/L) சான்றிதழ் பிரதியையும் விண்ணப்பக் கட்டணம் 1000/= ஐ மக்கள் வங்கிக் கிளையில் 890022700002592 எனும் கணக்கிலக்கத்தில் வைப்புச்செய்து, வங்கிப் பற்றுச்சீட்டின் பிரதியையும் தரவேற்றம் செய்து 30.07.2023 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்
14.07.2023 (C-6917)

## மோ.சைக்கிளில் பயணித்த போது திடீர் நெஞ்சுவலி
### யாழில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு நெஞ்சு வலியால் அவதிப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம்மாலை கொண்டு செல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை, சீனங்குடா, சின்னப்பிள்ளை சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தௌப்பிக் முகமட் தாரிஸ் (வயது-44) எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் அட்டை தொழிலை மேற்கொண்டு வரும் அவர் நேற்று முன்தினம் தெல்லிப்பழை நோக்கி மோட்டார் சைக்கிளில் நண்பருடன் சென்று கொண்டிருந்தார்.

அப்போது நெஞ்சு வலியால் அவதிப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். (ம-7)

## கலைப்பிரிவு கற்றவர்களும் தாதியர் பயிற்சியில்

(கொழும்பு)

தாதியர் ஆட்சேர்ப்பின் போது கலைப் பிரிவு படித்தவர்களையும் தாதியர் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளும் வகையில் விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனை தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

### தமிழ் கலாசார முறைப்படி
## சுவீடன் நாட்டு பெண்ணை கரம்பிடித்த யாழ். இளைஞன்



(யாழ்ப்பாணம்)

சுவீடன்நாட்டுபெண்ணை யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் கோலகலமாக திருமணம் செய்துள்ளார்.

குறித்த திருமணம் யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் தமிழ் கலாசார முறைப்படி அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த தம்பதியின் திருமண் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத் தளங்களில் வேகமாக பரவி வருவதோடு, பலரும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். (ம-7)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## தயாநிதி கஜேந்திரன்
## (இராஜா)



திதி வெண்பா

ஆண்டுமன்மத ஆனிமாதத் திங்கள் அன்று
காண்தகு அமரபக்கத் திரியோதசிதிதி தன்னில்
கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம் எமை
மீளாத் துயரில் ஆழ்த்தி

எட்டாண்டுகள் ஓடி மறைந்தது
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டகலாது
அன்பின் உயிராய்
எம் நெஞ்சங்களில் என்றும்
நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள்

இந்திர பிரஸ்ஷம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உன் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்


(C-6918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ரூபாவால் குறைகிறது உரத்தின் விலை-விவசாய அமைச்சு

(கொழும்பு)

**50 கிலோகிராம் எடையுள்ள எம்.ஓ.பீ அல்லது பூந்தி உரம் இன்று முதல் ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



தற்போது 15,000 ரூபாய்க்கு விற்கப்படும் குறித்த உரம் ஒரு மூட்டை இன்று முதல் 14,000 ரூபாய்க்கு வாங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தின் விலையானது ஏற்கனவே 19,500 ரூபாவிலிருந்து 15,000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நீதிமன்றத்தை ஒருபோதும் நான் அச்சுறுத்தவில்லை

## சட்டத்தரணிகள் சங்கத்திற்கு கடிதம் அனுப்பிய சரத் வீரசேகர

(கொழும்பு)

குண்டர்களால் பௌத்த உரிமை நாசமாக்கப்படுகின்றது. அவற்றை வடக்குக்கு சென்று பார்த்து வருமாறு சட்டத்தரணிகள் சங்கத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அறிவுறுத்தியுள்ளார்.

நீதிமன்றத்தை அச்சுறுத்தியதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரித்துள்ள சரத் வீரசேகர, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பாராளுமன்றத்திற்குள் நடந்து கொள்ளும் முறைமை எனக்கு நன்றாக தெரியும். பௌத்த உரிமைகளை நாசமாக்கும் பிரிவினைவாத குண்டர்களுக்காக முன்னிலையாகுவதற்கு முன்னர், இரண்டொரு தடவைகள் சிந்தித்துப் பார்க்குமாறும் சட்டத்தரணிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். நாங்கள் அனைவரும் நீதிமன்றத்தை மதிக்கிறோம் எனவும் தெரிவித்தார். (நி-5)

# காணாமல் போன இலங்கையர் காருக்குள் சடலமாக மீட்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அட்லாண்டாவுக்குச் சென்றிருந்த இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜோர்ஜியாவின் கென்னசோவில் உள்ள தனது இல்லத்தில் இருந்து அட்லாண்டாவுக்கு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

ஹசித் நவரத்ன என்ற 34 வயதுடைய இளைஞன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அட்லாண்டாவில் காரில் சடலமாக மீட்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த இளைஞனின் மரணத்திற்கான காரணம் இதுவரை பொலிஸாரினால் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஜூலை மாதம் 7 ஆம் திகதி ஹசித் நவரத்ன காணாமல் போனதாக முதலில் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# விசேட தேவையுடைய மாணவர்கள் இனி சாதாரண வகுப்புகளில்

## கல்வி அமைச்சு நவடிக்கை

(கொழும்பு)

விசேட தேவையுடைய மாணவர்களையும் அரச பாடசாலைகளின் சாதாரண வகுப்புக்களில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நீலமணி மலவீ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

வலயங்களிலுள்ள பணிப்பாளர்களின் அனுமதியுடன் விசேட தேவையுடைய மாணவர்கள் வகுப்புகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் இணைத்துக் கொள்ளப்படுவது வரலாற்றில் முதல் தடவை என்பதோடு அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் வரப்பிரசாதமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விசேட தேவையுடைய மாணவர்கள் இதுவரை சிறப்பு பிரிவுகளிலேயே கல்வி கற்று வந்தனர்.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நீலமணி மலவீ ஆராச்சி தெரிவித்துள்ளார். (நி-5)

# தமிழர்களின் பிரச்சினை குறித்து அமெரிக்க தூதுவர்-சம்பந்தன் ஆராய்வு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்புக் குறித்து அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டரில் குறிப்பிடுகையில்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பு சிறப்பாக இடம்பெற்றது. இலங்கையில் தமிழ் மக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. பிரச்சினைகளில் இருந்து தீர்வைப் பெற்று முன்னோக்கிச் செல்வது. சிறுபான்மையினருக்கான தேசிய அடையாளம். சீர்திருத்தங்கள். பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான மக்களின் கோரிக்கைகள் தொடர்பான கேள்விகளுக்கு தீர்வைப்பெறுவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பாடத்திட்டங்களை புதுப்பிக்க நடவடிக்கை-கல்வி அமைச்சர்

(கொழும்பு)



அடுத்த வருடத்திற்குள் அனைத்து பாடத்திட்டங்களையும் உடனடியாக புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழியின் அடிப்படையில் பாடசாலை பாடத்திட்டத்தை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி-5)

# மீண்டும் திரிபோஷ

(கொழும்பு)

திரிபோஷ உற்பத்தி மற்றும் விநியோகம் தற்போது வழமையான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக திரிபோஷ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதாந்தம் 13 இலட்சம் பக்கற்றுகள் அளவில் திரிபோஷ உற்பத்தி செய்யப்படுவதாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 37 இலட்சம் திரிபோஷ பக்கற்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மாதாந்தம் தேவைப்படும் திரிபோஷவை உற்பத்தி செய்வதற்காக 15 மெற்றிக் தொன் கிலோகிராம் அளவிலான சோளம் அவசியமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தொகையை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாததன் காரணமாக அவை இந்தியாவில் இருந்தே பெறுக்கொள்ளப்படுகின்றன.

கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் 3 வயதிற்கு அதிகமான குழந்தைகள் ஆகியோருக்கு மாத்திரமே தற்போது திரிபோஷ வழங்கப்பட்டு வருவதாக திரிபோஷ நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக தொழில் திணைக்களத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)



தொழில் திணைக்களத்திற்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உத்தேச தொழிலாளர் சட்டங்கள் மற்றும் ஓய்வூதியப் பணங்களை கொள்ளையடிக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# விடுமுறை எடுக்கும் அரச ஊழியர்களுக்கு இனி சம்பளம் இல்லை-பொது நிர்வாக அமைச்சு

(கொழும்பு)

அரச ஊழியர்கள் சம்பளம் இன்றி விடுமுறை எடுக்கும் முறையொன்றை பொதுநிர்வாக அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, உரிய விடுமுறை எடுக்கும் அரச ஊழியர்களுக்கு வெளிநாடு செல்ல அல்லது இலங்கையில் தங்க வாய்ப்பு கிடைக்கும்.

அந்தந்த விடுமுறையை எடுக்கும் போது அவர்களின் வயது மூப்பு அல்லது ஓய்வூதியத்திற்கு எந்தத் தடையும் இருக்காது என பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக போட்டியிலேயே சதம் சாதனை மழையில் ஜெய்ஸ்வால்

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிக்கெதிரான முதல் டெஸ்டில், சதம் அடித்ததன் மூலம் இந்தியக் கிரிக்கெட் அணியின் இளம் வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் பல சாதனைகளுக்கு சொந்தக்காரராகியுள்ளார்.



இந்தியக் கிரிக்கெட் அணி, முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 312 ஓட்டங்களை பெற்றுள்ளது. களத்தில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 143 ஓட்டங்களுடனும் விராட் கோலி 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 150 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. தற்போது இந்திய கிரிக்கெட் அணி, 162 ஓட்டங்கள் முன்னிலையில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

இப்போட்டியின் இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் ரோஹித் சர்மா மற்றும் அறிமுக வீரராக களம் கண்ட யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆகியோர் இணைந்து அணிக்கு வலுவான ஆரம்ப இணைப்பாட்டத்தை பெற்றுக் கொடுத்தனர்.

இருவரும் இணைந்து 229 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது தனது 10 ஆவது டெஸ்ட் சதத்தை அடித்த ரோஹித் சர்மா, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 2013 ஆம் ஆண்டுக்கு பிறகு சதம் கடந்தார்.

இதேபோல மறுமுனையில் அறிமுக டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த 21 வயதான யஷஸ்வி ஜெய்ஸ்வால், வெளிநாட்டில் அறிமுகமான டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றார்.

அத்துடன் அறிமுக டெஸ்டில் சதம் அடித்த 17ஆவது இந்தியக் கிரிக்கெட் வீரர் என்ற பெருமைக்கும் உரித்துடையவரானார்.

ஜெய்ஸ்வால்-ரோஹித்தின் 229 ஓட்டங்கள் என்ற இணைப்பாட்டம், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பதிவு செய்த அதிகபட்ச இணைப்பாட்டமாகும். (4)

## லங்கா பிரீமியர் லீக்

# தொலைக்காட்சி-வானொலி பங்காளர்கள் அறிவிப்பு

லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் நான்காவது பருவகாலத்துக்கான உத்தியோகபூர்வ தொலைக்காட்சி பங்காளராக, எஸ்.பி. சியும் வானொலி பங்காளராக தமிழ் எப்.எம் வானொலியும் இணைந்துள்ளன.

இந்த மாத இறுதியில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ள லங்கா பிரீமியர் லீக்கின் நான்காவது பருவகாலத்துக்கான போட்டிகள், ஜூலை மாதம் 30 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கொழும்பு மற்றும் கண்டி மைதானங்களில் நடைபெறவுள்ள இத்தொடரின் போட்டிகள் மாலை 3.மணிக்கும் இரவு 7.30 மணிக்கும் ஆரம்பமாகுகின்றன.

இந்த தொடரில் லைக்காஸ் ஜப்னா கிங்ஸ், கொழும்பு ஸ்ட்ரைக்கஸ், தம்புள்ளை அவுரா, காலி டைட்டன்ஸ் மற்றும் பிலவ் கண்டி ஆகிய ஐந்து அணிகள் பங்கேற்கின்றன.

உலகெங்கும் பல இலட்ச இரசிகர்கள் பட்டாளத்தைக் கொண்டுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடரில், இதுவரை நடந்த மூன்று தொடர்களிலும் லைக்காஸ் ஜப்னா கிங்ஸ் அணியே சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2877

பவி

இந்த Preiod முழுக்க நீ வெளியே நில்லு. அப்போதான் உனக்கு அறிவு வரும்.



அப்போ நீங்க பாடம் சொல்லிக் கொடுத்து அறிவு வராதா டீச்சர்

சிவாஞ்சலி

மனைவியிடம் மனம் விட்டுப் பேசினால் சண்டை வராதாம்



அடேய் சண்ட வந்ததே மனம் விட்டுப் பேசினதாலதாண்டா

காந்தன்




அபிநயா

மைனு- மாமா நீங்க காலைல வெந்நீர் குடிக்கனும். அப்பத்தான் உடம்பு நல்லா இருக்கும்.



மாமா-நான் குடிச்சிட்டுத்தான் இருக்கேன் மைனு. நீதான் அத காபின்னு சொல்லுற அதுக்கு நான் என்ன பண்ணுறது.

கயோதா

கடவுளே எனக்கு நல்ல வேலை, பெரிய வீடு, கார் இதெல்லாம் குடு.




இப்ப உண்டியல்ல போட்டியே இந்த 2 ரூபாய்க்கா?

பிரியன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அஸ்பார்டேம்' செயற்கை சுவையூட்டியால் புற்றுநோய் செல்கள் வளரக்கூடும்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

**'அஸ்பார்டேம்' என்ற செயற்கை சுவையூட்டி காரணமாக மனித உடலில் புற்றுநோய் செல்கள் வளரக் கூடும் என உலக சுகாதார நிறுவனம் நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இந்தச் செயற்கை சுவையூட்டி இனிப்பு குறைந்த பானங்கள் மற்றும் குறைந்த சர்க்கரை உணவுகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

செயற்கையான சுவையூட்டி தொடர்பில் உலகின் முன்னணி அமைப்பொன்று இவ்வாறானதொரு உண்மையை அறிவிப்பது இதுவே முதல் முறை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகளில் அதனை உட்கொள்வது பாதுகாப்பானது என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பிரபலமான இனிப்பூட்டிகளில் அஸ்பாரடேமும் ஒன்று. 'டயட் கோகா-கோலா' பானங்கள், 'மார்ஸ் சூயிங்கம்' போன்றவற்றில் அது பயன்படுத்தப்படுகிறது.

ஒருநாளில் 40 மில்லிகிராமுக்கும் குறைவான அளவிலே 'அஸ்பார்டேமை' ஒருவர் உட்கொள்ள வேண்டும் என்று அது பரிந்துரைத்துள்ளது. (நி-5)

# மசகு எண்ணெய்யின் விலை உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை சற்று அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரண்ட் ரக மசகு எண்ணெய் 81.41 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இதன்படி டபிள்யூரிஐ ரக மசகு எண்ணெய் 76.96 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.


ஜூன் மாதத் தொடக்கத்தில் இருந்து மசகு எண்ணெய்யின் விலை படிப்படியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



கணபதி அறக்கட்டளை நிர்வாகியின் பொன்விழாவை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கு 50 மரக்கன்றுகள் வழங்கி அவை பொது இடங்களில் நாட்டப்பட்டன.
(படம்:-மகாலிங்கம்)

# ஜனாதிபதி ரணிலை குறிவைத்து தாக்குதல் நடத்தத் திட்டம்

## பாதுகாப்பு தீவிரம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குறிவைத்து தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச நிதி ஒப்பந்த மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இந்தப் பயணத்தை முடித்து விட்டு நாட்டிற்கு மீண்டும் திரும்ப உள்ள நிலையில் இது குறித்து இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதிநவீன துப்பாக்கி மூலமோ, வேறு வடிவிலோ தாக்குதல் நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செல்லும் இடங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் பொலிஸ் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-5)


மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

செல்வி.
ராகினி நடராசா
நூலகர்-தரம் I




யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 28 வருடங்களாக நூலகராகவும், உதவி நூலகராகவும், பிரதம நூலகராகவும் பணியாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது பிரதம நூலகரான செல்வி. ராகினி நடராசா அவர்களின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துவதோடு அவர் தனது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் உடல் , உள, ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :- ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பொதுசன நூலகம், யாழ்ப்பாணம். (16292)


# இராசிபலன்

15.07.2023
ஆனி 30, சனிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.54 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 02.07 மணிவரை
சுபநேரம் -3.00-4.30 மணிவரை
இராகுகாலம்-9.00-10.30 மணிவரை

சனிப்பிரதோஷ விரதம்
சந்திராஷ்டமம்-விசாகம்.

வளவன்

**மேஷம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவம் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வயையில் அமையும்.

**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**துலாம்**
உறவினர் வழியில் மனநிறைவான செய்தி ஒன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**ரிஷபம்**
தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்**
தொழிலில் வருமானத்தை அதிகரிக்க திட்டம் தீட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பொறுப்புகள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்**
நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**
உறவினர் வழியில் அன்புத் தொல்லை ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கன்னி**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், உறவினர்கள் நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்.

**தனுசு**
குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மீனம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டும் நிலையுண்டு, பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

நீ வயிற்றைப் பெருக்கினால் வாழ்வைச் சுருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி-புளியடிச்சந்தி ரயில் கடவையை மீள திறக்க அமைச்சர் பந்துல நடவடிக்கை




(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட புளியடிச்சந்தி ரயில் கடவையை மீள திறப்பதற்கான நடவடிக்கையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன முன்னெடுத்துள்ளார்.

பாதுகாப்பற்ற புகையிரத கடவையாக இருந்த புளியடிச்சந்தி பகுதியில் அடிக்கடி ரயில் விபத்துக்கள் நேர்ந்தமையால் கடந்த 2016ஆம் ஆண்டு புகையிரத திணைக்களம் மேற்படி பாதுகாப்பற்ற கடவையை மூடி அடைத்திருந்தனர்.


இந் நிலையில் மேற்படி கடவையை வருடக்கணக்கில் பயன்படுத்தி வந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக துறைசார் அமைச்சருக்கு குறித்த கடவையின் அவசியத்தை வலியுறுத்தி கடவையை மீள திறந்து பாதுகாப்பான ரயில் கடவையாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று நேற்று வெள்ளிக்கிழமை யாழில் இருந்து கொழும்பு நோக்கி ரயிலில் புறப்பட்ட அமைச்சர் பந்துல, புளியடிச்சந்தியில் ரயிலில் இருந்து இறங்கி அப்பகுதி மக்களுடன் உரையாடியிருந்தார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபை ஊடாக ரயில் கடவைக்கு ஊழியர் ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் எம்மால் தானியங்கி தடை ஒன்று அமைத்து பாதுகாப்பான ரயில் கடவையாக புளியடிக் கடவையை மாற்ற முடியும் எனவும் எனவே கிராம மக்கள் இது தொடர்பாக நகர சபையிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்து ரயில் கடவைக்கு ஊழியர் ஒருவரை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-30)

# சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழா நாளை



(யாழ்ப்பாணம்)

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்ற நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்னத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் கலாநிதி. ஆறு. திருமுருகன், தொல்பொருள் திணைக்கள யாழ்ப்பாண உதவிபணிப்பாளர் A.V.பந்துலஜீவவும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், நல்லூர் பிரதேச செயலாளர் அ.எழிலரசி, யாழ்ப்பாண மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழாவை தொடர்ந்து மந்திரிமனை அரங்கில் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (4-5-33)

# இலட்சார்ச்சனையும் சமய நற்சிந்தனையும்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த இலட்ச்சார்ச்சனையும் சமய நற்சிந்தனையும் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகியதுடன் 22 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஆடிப்பூரத்தைப் பூர்த்தி தினமாகக் கொண்டு வருடாந்த இலட்சார்ச்சனையும் ஸ்ரீ வித்யா ஸ்ரீ சக்கர பூஜையும் மாலை 3-6 மணிவரை நடைபெற்று மாலை 6-7 மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கு.பாலஷண்முகனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது.

எனவே அடியவர்களை இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(4-5)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இப்பொதுக் கூட்டத்தில மத்திய அரசு, மாகாண சபை சார்ந்த சகல முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அ.றெஜி அயோசியஸ் தெரிவித்துள்ளார். (4-5)

# நல்லூர் பாலகதிர்காம வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தேவலோக ஐராவத யானையில் எம் பெருமான் சட்டநாதர் வீதியை வலம் வருவார்.

17 ஆம் நாள் ஆடிவேல் இரத பவனி, காளை மாடுகள் இழுத்து வர கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளதோடு 18 ஆம் நாள் வைரவர் சாந்தியும் இடம் பெறும். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 600 | 500 |
| தக்காளி | 350 | 600 | 500 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 220 | 300 |
| கோவா | 300 | 270 | 300 | 300 |
| கரட் | 400 | 480 | 500 | 500 |
| பூசணி | 120 | 120 | 100 | 140 |
| புடோல் | 150 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 380 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 250 | 160 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 450 | 500 | 300 | 250 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 280 |
| பீற்றூட் | 400 | 380 | 380 | 400 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 450 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 250 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 350 | 450 |
| முள்ளங்கி | 160 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | — | 150 |

# அம்பன், குடத்தனையில் வெங்காயச் செய்கை அமோகம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அம்பன் மற்றும் குடத்தனை பகுதியில் இம்முறையும் பல நூறு ஏக்கரில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருடாந்தம் ஆனி, ஆடி மாதத்தில் இடம்பெறும் குறித்த வெங்காய பயிர்ச்செய்கை வழமையை விட இம்முறை அதிகமாக இடம்பெற்று வருகிறது.

அம்பன், குடத்தனை, மட்டுமன்றி பருத்தித்துறை மந்திகை, தம்பசிட்டி உட்பட்ட பல கிராமங்கள் விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அம்பன் குடத்தனை வெங்காயத்திற்கான கேள்வி, மற்றும் விலை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5-104)

# விருந்தோம்பல் முகாமைத்துவத்திற்கான இலவசப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் வடமாகாணத்தில் வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவ பயிற்சிகளை கட்டணமின்றி, வழங்கும் நோக்கத்துடன் செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் காலங்களில் விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்கும் அரச உயர் கல்வி நிறுவனமான SLITHM (Sri lanka insititute of tourism and hotel management) உடன் இணைந்து வரவேற்பறை முகாமைத்துவம் (Front office management)-3மாதங்கள் மற்றும் சமையல் கலை (cookery) -3 மாதங்கள் போன்ற துறைகளில் பயிற்சிகளை வழ ங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

மேற்படி பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ளவர்கள் (வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) தங்களது பெயர் விபரங்கள் மற்றும் கல்வித் தகைமை என்பவற்றை பூரணப்படுத்தி 20.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கதக்கதாக tourismnorth.srilanaka@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சுற்றுலாப் பணியகம்,வட மாகாணம் A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கவும் மேலதிக தகவலகளுக்கு 077 7947500/0212 217311 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும். என வட மாகண சுற்றுலாப் பணியக பணிப்பாளர் அறிவித்துள்ளார்(4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி விளாவோடை பாலம் புனரமைப்பு பணிகள் விரைவில்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உமையாள் புரம் கிராமத்தின் விளாவோடை பாலத்தின் புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பாலமானது ஒவ்வொரு வருடமும் வெள்ள அன ர்த்தத்திற்கு உள்ளாகி வந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் இப் பாலத்தினை புனரமைக்குமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போது கிராமிய பாலங்கள் புனரமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பாலம் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்த கலந்துரையாடல் ஒன்று துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றலுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது குறித்த திட்டம் தொடர்பான களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு, விரிவாக ஆராயப்பட்டது. (4-5-316)



இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதிய நடைமுறைப்படுத்தலில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட இலக்குத் தொகையில் கூடிய பயனாளிகளை இணைப்புச் செய்து தேசியத்தில் அதிகூடிய சதவீதத்தினைப் பூர்த்தி செய்த அடிப்படையில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட செயலாளர் பெற்றமைக்காக நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைந்துள்ள யக்கப் ஹொட்டலில் தேசிய விருது வழங்கும் விழா நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

# கச்சதீவு இலங்கையின் சொத்து
## தமிழக மீனவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்
## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவர்

(அராலி)

இந்திய மீனவர் பிரச்சினை சம்பந்தமாக இந்திய பிரதமருடன் ஆக்கபூர்வமாக பேசி அதற்கொரு ஆக்கபூர்வமான நிலையான தீர்வை காட்டி தர வேண்டும் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான எம்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய அரசாங்கமானது 1947 மற்றும் 1948 ஆகிய காலப்பகுதியில் இரண்டு நாட்டையும் விட்டு வெளியேறியது. அந்த வேளையிலே கச்சதீவு எந்த நாட்டிற்குச் சொந்தமானது என உறுதியாக சொல்லப்படவில்லை.


அதனால் இடையில் இருந்து அள்ளாடிக் கொண்டிருந்த கச்சதீவை இரண்டு நாடுகளும் உரிமை கொண்டாடின. அந்தச் சந்தர்ப்பத்திலேயே ஒரு பேச்சுவார்த்தை ஏற்பட்டது. அது தனியே ராமேஸ்வரத்திற்கோ அல்லது இந்தியாவிற்கோ சொந்தமாக இருந்திருந்தால் அங்கே பேச்சுவார்த்தை வரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இவ்வாறு கச்சதீவு யாருக்கு என இரண்டு நாடுகளும் இழுபறி நிலையில் இருந்த வேளை அன்றிருந்த இந்திய பிரதமர் இலங்கை பிரதமருடன் ஒரு பேச்சுவார்த்தையை நடத்தி, இறுதியாக எமது கடற்பரப்பிலே இருக்கின்ற சர்வதேச எல்லைக் கோட்டிலே கூடுதலான எல்லையை இந்தியா பெற்றுக் கொண்டு கச்சதீவை எமக்கு விட்டுக் கொடுத்தது. இதுதான் அன்று நடந்தது. இதனை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேணடும்.

எல்லைக்கோட்டில் இருந்து சரியாக அளந்து பார்த்தால் நெடுந்தீவுக்கு அண்மையில் தான் கச்சதீவு அமைந்திருக்கின்றது. நெடுந்தீவில் இருந்து இராமேஸ் வரம் வெகு தூரத்தில் உள்ளது.

அந்த ஒப்பந்தத்தை உடைத்து மறுபரிசீலனை செய்து கச்சதீவை கையகப்படுத்த நினைக்கின்றார்கள். அது முற்றிலும் ஒரு தவறான விடயம். கச்சதீவு இன்றைக்கல்ல அது என்றைக்குமே இலங்கையின் சொத்து.

இந்தியாவில் உள்ள ஒரு அமைப்பின் ஊடாக உச்சநீதிமன்றத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கச்சதீவை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-104)



மக்கள் வங்கியின் 62 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி இரத்ததான முகாம் நிகழ்வு ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கியில் இடம்பெற்றது.

# இலவச கருத்தரங்கு

(கிளிநொச்சி)

சரும பராமரிப்பு சம்பந்தமான இலவச கருத்தரங்கு ஒறிபிலேம் நிறுவனத்தினால் நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளி நொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் காலை 9-12 மணிவரை நடைபெறவுள்ளது.

அத்துடன் சுயதொழில் வாய் ப்பை ஏற்படுத்தும் இலகுமுறை வழிகாட்டலும் வழங்கப்படும். பங்குகொள்ளும் அனைவருக்கும் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு 077 818 1099, 076 773 0510 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (4)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்நகராட்சி மன்றத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்களிலேயே அனுப்பப்படவேண்டும். படிவங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் (17.07.2023 தொடக்கம் 31.07.2023) ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது. இதன் அடிப்படையில் நிரந்தர நியமனத்தினை எவ்வகையிலும் கோர முடியாது.
2. இப்பதவிக்கு குறித்துரைக்கப்படட்ட வேதனமோ படிகளோ கிடையாது.

**தகைமைகள்**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
2. 31.07.2023 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைக்குள் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதுவிடின் வயதெல்லைக்கு அப்பாற்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
3. இலங்கை பிரஜையாகவும் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். இதனை கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.
4. நன்நடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
6. பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 10,000 ஐ செலுத்துதல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில், அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**வேதனம்**

அறவிடப்படும் ஆதனவரி நிலுவைத் தொகையின் 20% தரகுப் பணமாக வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினை தெளிவாகப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். நகராட்சி மன்றத்தில் நிரந்தரப் பதவி வகிப்பவர் விண்ணப்பிக்க முடியாது.
2. உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் "நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்." எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ அல்லது நியமனத்திற்கு பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ தெரியவருமிடத்து முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது என தெரியவருமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் முடிவுறுத்தப்படும்.
5. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத்திகதியாகிய 31.07.2023 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக "செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது நேரடியாக கையளிக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(C-6916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 230





மாடமாளிகைகள் இடிந்து விழுந்து பாழடைந்து கிடக்கின்றன. வீதிகளிலும் துறைமுகத்திலும் முன் போல் அவ்வளவு ஜனக்கூட்டம் இல்லை. வர்த்தகப் பெருக்கமும் அவ்வளவாக இல்லை. பெரிய பெரிய பண்டகசாலைகள் இல்லை. வீதிகளிலெல்லாம் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் மலை மலையாகக் குவிந்திருக்கவில்லை.

கடல் பூமிக்குள் புகுந்து ஆழம் மிகுந்த கால்வாயாக அமைந்து கப்பல்கள் வந்து பத்திரமாய் நிற்பதற்குரிய இயற்கைத் துறைமுகமாக இருந்ததை முன்னர் பார்த்தோம். இப்போது அந்தக் கால்வாயில் மணல் அடித்து அடித்துத் தூர்ந்து போய் ஆழம் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. ஆழமற்ற அக்கடற்கழியில் சிறிய படகுகளும் ஓடங்களும்தான் வரக்கூடும். நாவாய்களும் மரக்கலங்களும் சற்றுத் தூரத்தில் கடலிலே தான் நிற்க வேண்டும். படகுகளில் வர்த்தகப் பொருட்களை ஏற்றிச் சென்று அந்த மரக்கலங்களில் சேர்ப்பிக்க வேண்டும்.

மேலே கூறிய இடைக் காலத்தில் மாமல்லபுரம் சில புதிய சிறப்புக்களையும் அடைந்திருந்ததைக் குறிப்பிட வேண்டும். முக்கியமாக கடற்கரையோரத்தில் விளங்கிய அழகிய கற்கோயில் நம் கண்களையும் கருத்தையும் கவர்கின்றது. அது மகேந்திரன் - மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்ட குன்றுகளைக் குடைந்தெடுத்த கோவில்களைப் போன்றதல்ல. குன்றுகளிலிருந்து கற்களைப் பெயர்த்துக் கொண்டு வந்து கட்டப்பட்ட கோயில். சமுத்திர ராஜனுடைய தலையில் சூட்டப்பட்ட அழகிய மணிமகுடத்தைப் போல் விளங்குகிறது. அடடா! அந்தக் கோயில் அமைப்பின் அழகை என்னவென்று சொல்வது?

இதைத் தவிர நகரத்தின் நடுவே மூவுலகும் அளந்த பெருமாள் சயனித்திருக்கும் விண்ணகரக் கோயில் ஒன்றும் காட்சி அளிக்கிறது. சைவத்தையும் வைஷ்ணவத்தையும் இரு கண்களைப் போல எண்ணிப் போற்றி வளர்த்த பரமேசுவர பல்லவன் திருப்பணி செய்த விண்ணகரம் அது. திருமங்கையாழ்வார் இந்தக் கோயிலுக்கு வந்து தலசயன பெருமாளைத் தரிசித்துப் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவருடைய காலத்திலே கூடப் பல்லவ சாம்ராஜ்யம் பெருகி வளர்ந்த சிறப்புடன் விளங்கியது என்பதையும் மாமல்லபுரம் செல்வம் கொழிக்கும் துறைமுகமாக விளங்கியது என்பதையும் பின்வரும் பாசுரத்தின் மூலம் நன்கு அறியலாம்:

“புலன்கொள் நிதிக்குவை யொடு
புழைக்கை மா களிற்றினமும்
நலங்கொள்நவமணிக் குவையும்
சுமந்தெங்கும் நான் றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல் மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தா ரவரை
வலங்கொள் என் மட நெஞ்சே!”

திருமங்கையாழ்வாரின் காலத்துக்குப் பிற்பட்ட நூற்றாண்டுக் காலத்தில் பல்லவ சாம்ராஜ்ய சூரியன் அஸ்தமித்து விட்டது. ‘கல்வியில் இணையில்லாத காஞ்சி’ மாநகரின் சிறப்பும் குறைந்து விட்டது. ‘கலங்கள் இயங்கும் கடல் மல்லை’ யின் வர்த்தக வளமும் குன்றி வந்தது.

ஆனால் தமிழகத்துக்கு அழியாப் புகழ் அளிப்பதற்கென்று அமைந்த அந்த அமர நகரத்தின் அற்புதச் சிற்பக் கலைகளுக்கு மட்டும் எந்த விதக் குறைவும் நேரவில்லை. பாறைச் சுவர்களில் செதுக்கப்பட்ட சித்திர விசித்திரமான சிற்பங்களும் குன்றுகளைக் குடைந்து எடுத்து அமைத்த விமான ரதங்களும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அவற்றை அமைத்த காலத்தில் விளங்கியது போலவே இன்றைக்கும் புத்தம் புதியனவாக விளங்கின.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கடவுளின் தரிசனம் வேண்டி பலகாலம் தவம்

(நேற்றைய தொடர்ச்சி)

மலையின் சில மைல் தூரத்தை கடந்தவுடன் அங்கே வெள்ளியிலான பாறைகளும் வெள்ளித் துண்டுகளும் நிறைய இருந்தன. அதை பார்த்த கொஞ்சம் மீதி இருந்த மக்கள் ஓடிச்சென்று மூட்டை கட்ட ஆரம்பித்தனர்.



மன்னன் மறுபடியும் மக்களுக்கு உரக்க சொன்னான்; “விலை மதிக்க முடியாத கடவுளின் காட்சி கிடைக்க போகின்றது. அதற்கு முன்னால் இந்த வெள்ளிக்கட்டிகள் எதற்கு பயன்படப் போகின்றன” என்று உரைத்தான்.

மன்னா இப்பொழுது கடவுளின் காட்சியை விட வெள்ளிக் கட்டிகளே பிழைப்புக்கு உதவும் என்று சொல்லிக் கொண்டே மக்கள் முடிந்த அளவு அள்ளத் துவங்கி[illegible]

உங்கள் தலை[illegible] [illegible]முத்து என்று சொன்ன மன்னன். மீதி இருந்த ராஜ குடும்பத்தினரோடு மலையேற ஆரம்பித்தான்.

இ[illegible] [illegible] பட்டது தங்கமலை. ராஜகுடும்பத்தினர் பாதி பேர் அங்கே சென்றுவிட, மீதி இருந்தவர்கள் ராணியும் மந்திரியும் தளபதியும் மற்றும் முக்கியமானவர்கள் மட்டுமே.

சரி வாருங்கள், செல்வோம் என்று மீதி இருந்தவர்களை அழைத்துக் கொண்டு முக்கால் வாசி மலையை கடந்திருப்பான் மன்னன்.

அங்கே தென்பட்டது வைரமலை அதைப் பார்த்த ராணி முதற் கொண்டு அங்கே இருந்தவர்கள் ஓடிவிட, மலையின் உச்சியில் தன்னந் தனியாக போய் நின்றான் மன்னன்.

கடவுள் மன்னன் முன் பிரத்யட்சம் ஆகி “எங்கே உன் மக்கள்?” என்றார்.

மன்னன் தலை குனிந்தவனாக “அவர்களது வினைப்பயன் அவர்களை அழைத்துச் சென்றது அய்யனே, என்னை மன்னியுங்கள்” என்றான் மன்னன்.

அதற்கு கடவுள் “நான் யாராக இருக்கின்றேன், எப்படி இருக்கின்றேன் என்று கோடியில் ஒரு சிலரே அறிவார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கே எனது காட்சி என்பது கிட்டும். உலக இச்சைகள் என்ற சேற்றை பூசிக் கொண்டவர்கள் சிலருக்கு உடல், செல்வம், சொத்து, என்ற செம்பு, வெள்ளி, தங்கம், வைரம் போன்ற ஏமாற்றும் மாயைகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கடந்து இச்சையற்ற நிலையில் இருப்பவரே என்னை அடைவர்” என்று சொல்லி காட்சியை நிறைவு செய்தார் கடவுள். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
– லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணிப் பிணக்குகளால் சீரழியும் வட மாகாணம்

இப்போது வடபகுதியில் விரும்பத்தகாத இரண்டு விடயங்கள் முதன்மை பெற்றுள்ளன. அதில் ஒன்று விவாகரத்து, இரண்டாவது காணிப் பிணக்குகள்.

இங்கு விவாகரத்து என்ற விடயம் தனியாகப் பேசப்படவேண்டியது என்பதால், அதனை இப்போதைக்கு ஒத்திவைத்துவிடலாம்.

மாறாக, தற்போது வட மாகாணம் முழுவதிலும் சன்னதம் கொண்ட விடயமாகக் காணிப் பிணக்குகள் காணப்படுகின்றன.

அதிலும் நீதிமன்ற வழக்குகளில் கணிசமானவை காணி வழக்குகள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மற்றும் வன்னிப் பகுதிகளில் காணிப் பிணக்குகள் தலைவிரித்தாடுகின்றன.

ஒருவரின் காணியை இன்னொருவர் உரிமை கோருவது, காணியில் குடியிருக்க விட்டவர் காணி தனக்குச் சொந்தம் என அடாத்துச் செய்வது, போர்க்கால சூழலில் ஏற்பட்ட இடப்பெயர்வையும் புலம்பெயர்வையும் சாட்டாகக் கொண்டு தனியாருக்குச் சொந்தமான காணிகளைக் கபளீகரம் செய்வது, காணி உரிமையாளர் உரிய காணிக்குச் சென்றால் அவர்களுடன் சண்டித்தனம் புரிவது என ஏகப்பட்ட அட்டூழியம் நடந்தாகிறது.

இதனை இன்னும் குறித்துரைப்பதாயின், கள்ளக் காணி பிடிக்கின்ற நடவடிக்கைகளில் பலரும் ஈடுபட்டுள்ளனர் எனலாம்.

இந்த இடத்தில்தான், படித்தவர் படியாதவர் என்ற பேதமை இல்லாதிருக்கின்ற சமத்துவத்தை நாம் காண முடிகின்றது.

ஆம், காணி விடயத்தில் படித்தவர்களும் அடாத்துச் செய்கின்ற கொடுமையை எண்ணும்போதுதான் தவத்திரு குன்றக்குடி அடிகள் கூறிய; கற்றவன் கயவனாக இருந்தால், இந்த மண் தாங்காது என்ற தத்துவம் நினைவுக்கு வருகிறது.

ஆம், உறுதியுடன்கூடிய ஒருவரின் சொந்தக் காணியை இன்னொருவர் அபகரிப்பதென்பது இந்த நாட்டின் காணி தொடர்பான சட்ட நிர்வாகத்தில் மிகப்பெரும் தவறுகளும் பிழைகளும் இருக்கிறதென்பதை சுட்டி நிற்பதுடன் இவ்வாறான மிக மோசமான செயலுக்கு அரச நிர்வாகம் ஒத்தாசையாக இருக்கிறது என்ற உண்மையையும் நாம் இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது காணி சார்ந்த உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினர் கள்ளக் காணி பிடிக்கும் தொழிலுக்கு பக்க பலமாக இருக்கின்றனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் காணி உறுதி தொடர்பிலும் காணி விற்பனை மற்றும் வெளிப்படுத்தல் உறுதி ஆகிய விடயங்களிலும் அதனுடன் சம்பந்தப்பட்ட காணி அதிகாரிகள், சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிசுகள் நேர்மையாகச் செயலாற்ற வேண்டும்.

ஏனெனில் கபளீகரம் செய்யப்பட்ட தமது சொந்தக் காணியை மீட்பதற்காக வயது போனவர்கள் நீதிமன்றங்களுக்கு அலைகின்ற பாவம் சந்ததி சந்ததியாகப் பற்றித் தொடரவல்லது.

ஆகையால் காணிகளின் உரிமை விடயத்தில் மோசடிகள் இடம்பெறாமல் பாதுகாப்பது எம் மக்கள் சமூகத்தின் தலையாய கடமையாகும்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு சட்ட ரீதியாக செல்லுங்கள்

## யாழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு சட்ட ரீதியாக செல்லுங்கள். ஏமாற்று, மோசடிகாரர்களை நம்பி பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டாம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அதிகளவான மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். வெளிநாடு செல்பவர்கள் சட்டரீதியாக செல்லாது, அங்கு சென்று பல இன்னல்களுக்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அது தொடர்பில் நாம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகிறோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. வெளிநாட்டுக்கு அனுப்புவதாக சட்டவிரோத நபர்கள் பணமோசடிகள் செய்கின்றனர்.

இவற்றை ஊடக செய்தியாக மட்டும் வெளியிடாமல், அமைச்சுக்கும் அது தொடர்பில் முறைப்பாடுகள் அளிக்கும்போதே நடவடிக்கை எடுக்க முடியும். அதனூடாகவே ஏனையவர்களையும் பாதிப்பில் இருந்து காப்பாற்ற முடியும்.

தென்மாகாணத்தில் மோசடிகள் பற்றி சமூக வலைத்தளங்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்கின்றனர். பாதிக்கப்பட்ட சம்பவங்கள், ஏமாற்றியவர்கள் தொடர்பில் பதிவுகளை வெளியிடுகின்றனர். ஆனால் வடமாகாணத்தில் அவ்வாறு செய்வது மிக குறைவு.

அதேவேளை, தமிழில் உங்களோடு உரையாட முடியாதமைக்கு மனம் வருந்துகிறேன். அதற்கு நான் காரணமல்ல முன்னர் இருந்த அரசியல்வாதிகள் எங்களை பிரித்து விட்டார்கள்.

வடக்கு கிழக்கில் ஏற்பட்ட பிரச்சினைகள் நாம் சகோதரத்துவம் இல்லாமல் போனதற்கு அரசியல்வாதிகளே காரணம்.

தற்போது ஜனாதிபதி இவற்றை தீர்க்கும் முகமாக வடபகுதி மக்களின் காணிகளை அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மதவாதம், இனவாதம் என பிரிந்து வாழாமல் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ நடவடிக்கை எடுக்கிறோம் என மேலும் தெரிவித்தார்.

(ம-7,33)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசனை

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசித்து வருகின்றது.

தற்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தமது கட்சி கலந்துரையாட ஆரம்பித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

"நாங்கள் இந்த நடவடிக்கை குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த விடயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை." எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் ரம்புக்வெல்ல மருந்துகளை கொள்வனவு செய்தமை மற்றும் முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக பல விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.

மருத்துவ அலட்சியத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டவுடன் சபையின் அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

(ம-7)

# காணாமல்போன வெளிநாட்டு பெண் சடலமாக மீட்பு

கடுகண்ணாவ -அலகல்ல மலையில் நடைபயணம் மேற்கொண்ட போது காணாமல்போனதாக கூறப்படும் 32 வயதுடைய டென்மார்க் பெண்ணின் சடலம் நேற்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (10.07.2023) நடைப் பயணம் சென்ற போது பெண் காணாமல்போனதை அடுத்து, பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில், குறித்த பெண் மலையில் நடைப்பயணம் மேற்கொண்ட போது தவறி விழுந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஜூன் 26 அன்று நாட்டிற்கு வந்த பெண் தனியாக சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவர் ஜூலை 10 அன்று கண்டி பேக் பேக்கர்ஸ் விடுதிக்கு சென்றிருந்தார், இதன் பின்னர் அங்கிருந்து சென்ற அவர் இரவில் விடுதிக்கு திரும்பாததால் விடுதி நிர்வாகம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சுகாதார அமைச்சு பண்ணை, சிறை வளாகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம் கோட்டை, பண்ணை வைத்தியசாலை, பண்ணை, நாவற்குழி சங்கன் கட்டுமானம், நாவற்குழி லிங்க்ஷ [illegible], ஐயனார் கோவிலடி நாவற் குழி, கோகிலா கண்டி மங்களா பட்டறை, கோகிலா கண்டித்துறை, மறவன் புலவு, கேரை தீவு, தச்சந் தோப்பு, தனங்கிளப்பு, Maravanpulo wind. Plant 55 ஆம் பிரிவு இராணுவ முகாம் கட்டைக்காடு, தாளையாடி ஐஸ் தொழிற்சாலை, J.K.W. S.S.P. Site Office- தாளையாடி. ஆழியவளை, கட்டை காடு, கட்டைகாடு இராணுவ முகாம் (55ம்பிரிவு), கேவில் முள்ளியான், மருதங்கேணி (தாளையடி), நாவலடி சந்தி மருதங்கேணி [illegible], வத்திராயன் வெற்றிலைக் கேணி, வெற்றிலைக் கேணி முள்ளியான் இராணுவமுகாம், முள்ளியான், வெற்றிலைக் கேணி கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பூந்தோட்டம் தொழிற் பூங்கா, புதியகார்கில்ஸ் பூட்சிற்றி, பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியடி, பூந்தோட்டம் தொழில் பேட்டை, காத்தார்சின்ன குளம், மகாறம்பைகுளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ராஹவுஸ், பல்மெய்ராஹவுஸ் தலைமன்னார், தலை மன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை - ஐஸ் தொழிற் சாலை Grotto of lady lourds church பேசாலை, கட்டுகாரங் குடியிருப்பு, கரைசல்திட்டம், கீழியங் குடியிருப்பு, குரு சுபாடு கடற்படைமுகாம், படப்பாடி நீர்வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட்டான்குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம்சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், சிறுதோப்பு, தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலை மன்னார் புகையிரத நிலையம், துள்ளு குடியிருப்பு, துள்ளுகுடியிருப்பு தும்புத் தொழிற் சாலை துள்ளு குடியிருப்புத் திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



வெலுப்பனால் தான் உயிர் இழப்பது உறுதி என்று அறிந்த சேட்டதீசன் தன் உடைவாளினால் தன்னைத் தானே குத்திக் கொண்டு இறந்தான். ஆகவே அக்கபோதி மறுபடியும் 2 ஆம் முறையாகத் தமிழ்ப் படையின் உதவியினால் இலங்கைக்கு அரச னானான். அவன் அழைத்து வந்த தமிழ்ப் படையினரின் பெரும்பா லானோர் அநுராதபுரத்திலே தங்கி விட்டார்கள்.

**மூன்றாம் அக்கபோதி**
**(கி.பி. 632-648)**

மூன்றாம் அக்கபோதி என்பவன் அநுராதபுர இராசதானியை 632 ஆம் ஆண்டிலும் பின்னர் 632 ஆம் ஆண்டு தொடக்கம் 648 ஆம் ஆண்டு வரையென இரு தடவை கள் ஆட்சி செய்தான். இவன் இவ னது தந்தையான சிலாமேகவண் ணனின் பின் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின்னர் முதல் தடவை மூன்றாம் சேட்டதீசனும் இரண்டாம் தடவை முதலாம் தாதோபதீசனும் ஆட்சிபீடம் ஏறினர். இவன் மௌரிய வம்சத்தைச் சேர்ந்த அரசன் ஆவான்.

**முதலாம் தாதோபதீசன்**
**(கி.பி. 648 - 650)**

முதலாம் தாதோபதீசன் என்பவன் அநுராதபுர இராசதானியை 648 ஆம் ஆண்டு தொடக்கம் 650 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய் தான். இவன் மூன்றாம் அக்க போதியின் பின்னர் ஆட்சிபீடம் ஏறி னான். இவனின் பின்னர் இரண் டாம் காசியப்பன் ஆட்சிபீடம் ஏறி னான்.

போர்க்களத்திலே உயிரை விட்ட சேட்டதீசனுடைய அமைச்சனான தாதோபதீசன், தன்னுடைய அரசன் இறந்து விட்டபடியாலும் அக்கபோதி வெற்றியடைந்தபடியாலும் தனக்கு இலங்கையில் செல்வாக்கு இல்லை யென்பதையறிந்து தமிழ்நாட்டில் சென்று அடைக்கலம் புகுந்தான்.

அடைக்கலம் புகுந்த தாதோப தீசன் அக்கபோதியை வென்று இலங்கையரசைத் தான் அடை வதற்குச் சமயம் பார்த்திருந்தான். புதியதோர் தமிழ்ச்சேனைகளை அழைத்துக் கொண்டு இலங்கை க்குச் சென்று அக்கபோதியுடன் போர் செய்தான். இந்தப் போரில் தாதோ பதீசன் வெற்றியடைந்தான். அக்க போதி தோல்வியுற்றான். தோல் வியடைந்த அக்கபோதி தமிழ நாட்டிற்கு ஓடினான். தமிழ்ச் சேனையினால் வெற்றி பெற்று தாதோபதீசன் அரசாட்சி யைக் கைப்பற்றினான்.

**இரண்டாம் காசியப்பன்**
**(கி.பி 650-659)**

இரண்டாம் காசியப்பன் அநுரா தபுர இராசதானியை 650 ஆம் ஆண்டு தொடக்கம் 659 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். இவன் முதலாம்தாதோபதீசனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான்.

**முதலாம் தப்புலன்**
**(கி.பி 659-662)**

முதலாம்தப்புலன் அநுராதபுர இராசதானியை 659 ஆம் ஆண்டு தொடக்கம் 662 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். இவனின் பின்னர் இரண்டாம் தாதோபதீசன் ஆட்சிபீடம் ஏறினான்.

**இரண்டாம் தாதோபதீசன்**
**(கி.பி 662-667)**

இரண்டாம் தாதோபதீசன் அநுரா தபுர இராசதானியை 662 ஆம் ஆண்டு தொடக்கம் 667 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். இவன் இவனது சகோதரனான முத லாம் தப்புலனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். 667 ஆம் ஆண்டில் இவன் இறந்த பின்னர் நான் காம் அக்கபோதி ஆட்சிபீடம் ஏறி னான்.

**நான்காம் அக்கபோதி**
**(கி.பி 667-683)**

நான்காம் அக்கபோதி என்பவன் அநுராதபுர இராசதானியை 667 ஆம் ஆண்டு தொடக்கம் 683 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். இவன் இவனது சகோதரனான இரண் டாம் தாதோபதீசனின் பின்னர் ஆட்சி பீடம் ஏறினான். இவனின் பின்னர் தத்தன் என்பவன் ஆட்சி செய் தான்.

**தத்தன்**
**(கி.பி 683-684)**

தத்தன் அநுராதபுர இராசதா னியை 683 ஆம் ஆண்டு தொடக் கம் 684 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். அதன் பின்னர் 684 இல் உன்கங்கர ஹத்ததத்தன், ஆட்சிபீடம் ஏறினான்

**உன்கங்கர ஹத்ததத்தன்**
**(கி.பி. 684)**

உன்கங்கர ஹத்ததத்தன் என்ப வன் அநுராதபுர இராசதானியை 684 இல் 6 மாதம் ஆட்சி செய்தான். உன்கங்கர ஹத்ததத்தனின் பின்னர் இரண்டாம் லம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்த மானவண்ணன் ஆட்சிபீடம் ஏறினான்.

**இரண்டாம் லம்பகர்ண வம்சம் மானவண்ணன்**
**(கி.பி. 684-719)**

மானவண்ணன் அநுராதபுர இராசதானியை 684 ஆம் ஆண்டில் இருந்து 719 ஆம் ஆண்டு வரை ஆண்டு வந்தான். இவர் இரண்டாம் லம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்த முதலாம் அரசன் ஆவான். இவ னுக்கு முன்னர் மௌரிய வம்ச மன் னன் உன்கங்கர ஹத்ததத்தன் ஆட் சியில் இருந்தான்.

இவனின் பின்னர் இவனது மக னான ஐந்தாம் அக்கபோதி ஆட்சி யமைத்தான்.

ஐந்தாம் அக்கபோதி, மூன்றாம் காசியப்பன், முதலாம் மகிந்தன் ஆகிய இம்மூவரும் இவனது மகன கள் ஆவர். மானவண் ணனுக்கு அரசுரிமை கிடைக்க ஈழத்தின் மீது பல்வர் படையெடுத்ததாக கதை யுண்டு.

**ஐந்தாம் அக்கபோதி**
**(கி.பி. 719-725)**

ஐந்தாம் அக்கபோதி என்பவன் அநுராதபுரத்தை 719 தொடக்கம் 725 வரை ஆட்சி செய்தான். இவன் தனது தந்தையான மானவண் ணனின் பின் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் மூன்றாம் காசியப்பன் ஆட்சிபீடம் ஏறினான்.

**மூன்றாம் காசியப்பன்**
**(கி.பி 725-731)**

மூன்றாம் காசியப்பன் என்பவன் அநுராதபுரத்தை 725 தொடக்கம் 731 வரை ஆட்சி செய்தான். இவன் தனது சகோதரனான ஐந்தாம் அக்க போதியின் பின் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இவனது இளைய சகோதரன் முதலாம் மகிந்தன் ஆட்சிபீடம் ஏறினான்.

**முதலாம் மகிந்தன்**
**(கி.பி 731-733)**

முதலாம் மகிந்தன் என்பவன் அநுராதபுர இராசதானியை 731 தொடக்கம் 733 வரை ஆட்சி செய் தான். இவன் தனது சகோதரனான மூன்றாம் காசியப்பனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இவனது மருமகன் ஆறாம் அக்க போதி ஆட்சிபீடம் ஏறினான்.

**ஆறாம் அக்கபோதி**
**(கி.பி. 733-772)**

ஆறாம் அக்கபோதி என்பவன் அநுராதபுர இராசதானியை 733 தொடக்கம் 772 வரை ஆட்சி செய் தான். இவன் தனது மாமனான முத லாம் மகிந்தனின் பின்னர் ஆட் சிபீடம் ஏறினான். இவனின் பின் இவனது மைத்துனன் ஏழாம் அக்க போதி ஆட்சிபீடம் ஏறினான்.

**ஏழாம் அக்கபோதி**
**(கி.பி. 772-778)**

ஏழாம் அக்கபோதி என்பவன் அநுராதபுர இராசதானியை 772 தொடக்கம் 778 வரை ஆட்சி செய் தான். இவன் தனது மைத்துன னான ஆறாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இரண்டாம் மகிந்தன் ஆட்சிபீடம் ஏறினான்.

**இரண்டாம் மகிந்தன்**
**(கி.பி 778-797)**

இரண்டாம் மகிந்தன் என்பவன் அநுராதபுர இராசதானியை 778 தொடக்கம் 797 வரை ஆட்சி செய் தான். இவன் தனது மைத்துன னான ஆறாம் அக்கபோதியின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இரண்டாம் தப்புலன் ஆட்சிபீடம் ஏறினான்.

**இரண்டாம் தப்புலன்**
**(கி.பி 797-802)**

இரண்டாம் தப்புலன் என்பவன் அநுராதபுர இராசதானியை 797 தொடக்கம் 802 வரை ஆட்சி செய்தான். இவன் தனது தந்தை யான இரண்டாம் மகிந்தனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இவனது மகன் மூன்றாம் மகிந்தன் ஆட்சிபீடம் ஏறினான்.

**மூன்றாம் மகிந்தன்**
**(கி.பி 802-805)**

மூன்றாம் மகிந்தன் என்பவன் அநுராதபுர இராசதானியை 802 தொடக்கம் 805 வரை ஆட்சி செய்தான். இவன் தனது தந்தை யான இரண்டாம் தப்புலனின் பின்னர் ஆட்சிபீடம் ஏறினான். இவனின் பின் இவனது மகன் எட்டாம் அக்கபோதி ஆட்சிபீடம் ஏறினான்.

**எட்டாம் அக்கபோதி**
**(கி.பி 805-816)**

எட்டாம் அக்கபோதி என்பவன் அநுராதபுர இராசதானியை 805 தொடக்கம் 816 வரை ஆட்சி செய் தான். இவன் தனது சகோதரனான மூன்றாம் மகிந்தனின் பின்னர் ஆட்சி பீடம் ஏறினான்.

இவனின் பின்னர் இவனது சகோதரனான மூன்றாம் தப்புலன் ஆட்சிபீடம் ஏறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனம், மதம்...

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் இன்று ஆரம்பிக்கப்பட உள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சி தொடர்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'"புதிய அரசாங்கத்தில் நாட்டை முன்னேற்றும் பயணத்தில் அனைவரையும் ஒன்றுதிரட்டி செயற்படும் திட்டத்தின் காரணமாகவே இந்த glocal fair திட்டத்தை நாம் யாழில் ஆரம்பித்தோம்.

கட்சி, மதங்களை மறந்து யாழ். மக்கள் அனைவரையும் நாம் இந்த கண்காட்சிக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

குறித்த கண்காட்சியானது இன்று 15ஆம் திகதி மற்றும் நாளை 16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் தொழில் அமைச்சின் கீழான சகல திணைக்களங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் சேவைகள் அனைத்தும் ஓர் இடத்தில் ஒருமித்துள்ளதால் சகலருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த கண்காட்சி வேலைத் திட்டத்தில் ஆலோசனை சேவைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்புக்கு வந்து தீர்த்துகொள்ளக்கூடிய சில பிரச்சினைகளை யாழிலே தீர்க்க சில வழிகளை இங்கு பெற முடியும்.

விசேடமாக சர்வதேச வேலைத் திட்டங்களை பற்றி அறியும் வாய்ப்பு யாழ். மக்களுக்கு கிடைத்துள்ளது.

யுத்தத்தின் பின் இதுவே முதல் தடவையாக யாழில் இவ்வாறானதொரு நிகழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என தெரிவித்தார்.(ம-7,33,104)

## கஞ்சாவுடன்...

றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் கேரள கஞ்சா கடத்துவதாக வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பேருந்தினை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வைத்து சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது ஐந்தாகப் பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்ட 10 கிலோ 74 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன், அதனை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த பேருந்தில் பயணித்த கடற்படை சிப்பாயை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் குறித்த கடற்படை சிப்பாயிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் முழங்காவிலில் உள்ள முகாமில் பணியாற்றிவரும் 27 வயதுடைய நபர் எனவும் தெரியவந்துள்ளது. (ம-7,250)

## மருந்து...

அதேநேரம், அனைத்து வைத்திய சாலைகளிலும் உள்ள மருந்துகளின் அளவு மற்றும் நாளாந்தம் பெறக்கூடிய மொத்த மருந்துகளின் தரவுகளை, சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயல்முறை வைத்திய சாலைகளுக்கிடையே மருந்துகளை பரிமாறிக்கொள்ள உதவுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழ் மக்கள்...

நேற்று தமிழர்களால் குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் பொங்கல் விழா ஒன்றினை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்காக நேற்றுக் காலை பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் என சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் அங்கு கூடி பொங்கல் விழாவிற்கான ஒழுங்குகளை செய்து கொண்டிருந்தபோது பெருமளவு பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், ஆக்கிரமிக்கப்பட்டு கட்டப்பட்ட குருந்தூர் விகாரையின் விகாராதிபதியும் சிங்கள மக்களும் அங்கு கூடி பொங்கல் விழாவுக்குச் சென்ற தமிழ் மக்களை தடுத்து நிறுத்தியதுடன் பொங்கல் விழாவை நடத்த விடாமல் தடுத்து மலையிலிருந்து அனைவரையும் கீழே இறக்கியுள்ளனர்.

அதேவேளை முன்னதாக பொங்கல் விழாவுக்காக கற்பூரம் ஏற்றப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சப்பாத்து கால்களுடன் நுழைந்து கற்பூர தீபத்தை காலால் அணைத்துஉள்ளார்.

மேலும் பொங்கல் விழாவிற்காக கூடியிருந்தவர்களில் ஒருவரை பொலிஸார் தாக்கியதுடன் குருந்தூர்மலை ஆதிசிவனுக்கு நேற்று நடைபெற இருந்த பொங்கல் விழாவும் திட்டமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது. இது ஆதிசிவனுக்கு பொங்கல் வைக்க சென்ற மக்களின் மனங்களை புண்படுத்தியுள்ளது.

அதேவேளை குருந்தூர் ஆதிசிவன் பொங்கல் விழாவில், பொது மக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வராஜா கஜேந்திரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பா.கஜதீபன், எஸ்.பவன் மற்றும் சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞானப்பிரகாசம் கிஷோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இருந்தனர். (ம-7)

## நீதி...

டுள்ளது.

பொலிஸாரால் நீதிமன்ற உத்தரவை மீறியும் பூஜை வழிபாடுகளை தடுத்தமை தொடர்பிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன் ஆகியோரால் இந்த முறைப்பாடு நேற்று மாலை பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-7)

## போதை...

இவர்கள் 20 முதல் 30 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சந்தேக நபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## இலங்கையின்...

செய்து வருகின்றனர்.

இந்த வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவுப் பாலத்தை உருவாக்க முடிந்துள்ளது.

அது இலங்கை மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்தும் என நான் நம்புகிறேன். இலங்கை மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் அந்த மக்களுடன் இந்தியா துணை நின்றது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு இந்திய அரசாங்கம் உட்பட வர்த்தக சமூகம் உதவிகளை வழங்கியது.

நிதி நெருக்கடியின் போதும், இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் வியாபாரங்களை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


தன நிதானய
திகதி - 2023.07.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1205
S 10 29 34 56 S
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத
திகதி 2023.07.14 | சீட்டிழுப்பு இலக்கம் 3417
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
X 01 38 39 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1523
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
Z | 04 | 03 05 52 63

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.14
சீட்டிழுப்பு இலக்கம் 484
வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 04 19 42 52 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/14
சீட்டிழுப்பு இலக்கம் 5175
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 3 4 7 2 8 6
தேசிய லொத்தர் சபை

Lucky 7
சீட்டிழுப்பு இலக்கம் 0001 | திகதி 2023.07.14
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு
விசேட சீட்டிழுப்பு ரூ.10,337,039.52
வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | L7 இலக்கம்
விருச்சிகம் 3 1 6 9 2 9 1 4
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 2 6 1 1 6
மோட்டார் வாகன வெற்றி இலக்கம் 0 4 1 0 8 6 8
ரூ. 200,000/- வெற்றி இலக்கங்கள் 0 1 7 9 0 0 5 / 0 9 7 5 2 5 9 / 0 9 7 6 8 8 2 / 0 6 0 7 0 1 0
தங்கப்பவுண் வெற்றி இலக்கங்கள் 0 9 7 0 2 0 0 / 0 1 1 1 0 1 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2149 | வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.14 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 28 60 62 67 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,173,292.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 03 16 48 65 M
DLB

சனிதா
திகதி 2023.07.14 | வெற்றி வாரம் 4310 | வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 29 38 44 71 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,014,956.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 28 48 49 50 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

சசிரி SASIRI
வெற்றி வாரம் 349
சீட்டிழுப்பு திகதி 2023.07.14
பச்சை
வெற்றி இலக்கங்கள் 20 | 31 | 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,574,600/-
DLB

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3861 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.14 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 31 46 50 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,227,060/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 37 43 54 62 ரிஷபம்
DLB

கப்ருக
திகதி 14.07.2023 | வெற்றி வாரம் 1325 | வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 17 01 28 38 56
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 416,751,064.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 24 36 37 62 I
DLB தொலைபேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 1975
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.07.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,428,462/-
வெற்றி இலக்கங்கள் 19 30 36 60 B
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 05 11 54 67 I
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்கவில் ரஜினிகாந்த்



சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நேற்று இலங்கை வந்தார்.

அவர் சென்னையில் இருந்து மாலே செல்லும் வழியில் இலங்கைக்கு வந்து, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சில மணித்தியாலங்களை செலவிட்டுள்ளார்.

விமான நிலையத்தின் விசேட விருந்தினர் அறைக்கு நடிகர் ரஜினிகாந்த் அழைத்துச் செல்லப்பட்டு, அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அவர் எடுத்துக் கொண்ட படங்கள் சில சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த ஒளிப்படங்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் உத்தியோகபூர்வ பேஸ்புக் தளத்தில் பகிரப்பட்டுள்ளன. (ம-7)

# வெளிநாட்டு வேலைக்கு செல்வோருக்கு யாழில் தொழில் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோருக்கான வடக்கு மாகாணத்திற்கான தொழிற் பயிற்சி நிலையம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைவதற்கான காணியை பெற்றுத்தருமாறு தான் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரை சந்தித்து கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

மேலும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான குளோபல் ஃபேர்-2023 இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதன் மூலம் ஆள் கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களை தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கு பயிற்சி பெறாதவர்களுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லவும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் செயற்பட்டு வருகிறோம் என்றும் அமைச்சர் கூறினார். (ம-7,33,104)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழுக்கு விசேட தொடருந்து சேவை

நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவுநேர விசேட அதிசொகுசு கடுகதிசுற்றுலா தொடருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நல்லூர் ஆலய திருவிழாவுக்காக வருகின்ற பக்தர்களின் நலன்கருதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவுநேர விசேட அதிசொகுசு கடுகதி சுற்றுலா தொடருந்து சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக பதுளை ஓடிசி, சீதாவாகை ஓடிசி போன்று யாழ்ப்பாணம் ஓடிசி தொடருந்து சேவை ஓகஸ்ட் மாதம்முதலாம்திகதி ஆரம்பிக்கப்படும்என தெரிவித்தார்.(ம-7)

# யாழ் பல்கலை...

வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம், பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் எஸ்.கே. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளித்தார். அங்கு அவர் வழங்கிய ஊடக விபரிப்பில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு,

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப்பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைகள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 162 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஆறு பேரும், முது மெய்யியல்மாணி பட்டத்தை 04 பேரும், தூய சக்தி தொழில் நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை 2 பேரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 56 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 86 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 05 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 03 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கை நெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப் பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும்வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக் கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற மாணவர்களும், அவர்கள் சார்பில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள வருகின்ற விருந்தினர்களும், ஏனையவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

பட்டமளிப்பு நிகழ்வுகளை நேரலையாக பல்கலைக்கழகத்தின் யூரியுப் மற்றும் முகப்புத்தகப் பக்கங்களினூடாகவும், பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் வாயிலாகவும் கண்டு களிக்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆவது வருடத்தில் நடைபெறவுள்ள பொன்விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக இப்பட்டமளிப்பு விழா இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7,33,104)

# வவுனியா தோணிக்கல்லில் கைக்குண்டு மீட்பு

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல், லக்சபான வீதியில் பராமரிப்பு அற்ற காணியை துப்பரவு செய்த போது கைக்குண்டு ஒன்று காணப்பட்டதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த காணிக்கு சென்று குறித்த கைக்குண்டை மீட்டெடுத்துள்ளனர்.



குறித்த கைக்குண்டு இன்னும் இயங்கு நிலையில் காணப்படுகின்றதா? அல்லது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றதா? என்பதை ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கு பொலிஸாரினால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அவர்கள் கைக்குண்டை பாதுகாப்பான முறையில் அங்கிருந்து அகற்றியுள்ளனர். (ம-7,250)


## காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் கைதடியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி

(16297)

076 788 0591
076 739 0413

## வேலையாட்கள் தேவை

வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel Indian Restaurant ற்கு
☞House Keeper
☞Waiter (உணவு பரிமாறுநர்)
அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
(16255)
076 830 3931

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்.
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சுப்பர் லேனி, யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
சம்பளம் - 30'000/-

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=
(16033)
077 544 8503

## விறாத்துக் கோழி குஞ்சுகள் விற்பனைக்கு

பத்திய தேவைக்கு ஏற்ற
குஞ்சுகள் ஒன்று 950/=
077 332 2433
சுழிபுரம்
(16296)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org